
[redacted] PRIMARY SCHOOL

STRIVE FOR THE BEST

தாள் 1 — கட்டுரை

நேரம் - 40 நிமிடம்
மதிப்பெண்கள் - 20

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு 60 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதவும். படத்தின் அடியில் உதவிச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளவும்.




| | |
|---|---|
| வீடு திரும்பும் போது | ஆத்திரத்துடன் |
| உரத்த ஒலி | தடுத்து நிறுத்தினாள் |
| கற்களை வீசி | திட்டித் தீர்த்தாள் |
| இரக்கமற்ற செயலை | மனம் திருந்தினார்கள் |
| வேதனையில் | அன்புடன் அணைத்தாள் |

BUKIT TIMAH PRIMARY SCHOOL

STRIVE FOR THE BEST

# தொடக்கப்பள்ளி

# தமிழ் மொழி ஆண்டிறுதித் தேர்வு

## தாள் 2 2013

NAME : ____________________ (     )

CLASS : ____________

DATE : ____________

SETTER : ____________

DURATION : 1hr 30 min


7 PAGES
55 QUESTION

DO NOT OPEN THIS BOOKLET UNTIL YOU ARE TOLD TO DO SO.
FOLLOW ALL INSTRUCTIONS CAREFULLY.
ANSWER ALL QUESTIONS.

| | MARKS |
|---|---|
| | / |
| Total | |

PARENT'S SIGNATURE: ____________

<u>கருத்து விளக்கப்படம்.</u> (5 மதிப்பெண்கள்)



# குடும்ப மெதுநடை

உங்கள் குடும்பத்துடன் மெதுநடை செய்ய விருப்பமா?

நாள்: 9 நவம்பர் 2008


நேரம்: காலை 7.30

இடம்: தேசிய விளையாட்டு அரங்கம்

கட்டணம்: பெரியவர்கள் - \$5
சிறுவர்கள் - \$3


**முதல் பரிசு**

இந்தியா செல்ல
2 விமானச்சீட்டுகள்




**இரண்டு முதல் நான்காம் பரிசு**

கணினி



**ஐந்து முதல் பதினைந்தாம் பரிசு**

புகைபடக்கருவி



சரியான விடையை எழுது

6. இந்த நிகழ்ச்சியில் உங்கள் ______________ மெதுநடை செய்யலாம்.

7. மெதுநடை ______________ மாதத்தில் நடைபெறுகிறது.

8. கலந்துகொள்பவர்கள் காலை ______________ மணிக்கு செல்லவேண்டும்.

9. முதல் பரிசாக ______________ செல்ல இரண்டு விமானச் சீட்டுகள் வழங்கப்படும்.

10. ஆறாவது பரிசை வென்றால் உங்களுக்கு ______________ பரிசாக கிடைக்கும்.

| | | |
|---|---|---|
| இந்தியாவுக்கு | நவம்பர் | குடும்பத்துடன் |
| புகைபடக்கருவி | ஏழரை | கணினி |

## செய்யுள் ( 5 ம.)

கீழ்க்காணும் செய்யுளை நிறைவு செய்வதற்கு ஏற்ற சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது.

11. வைகறை ______________ எழு.

| | | |
|---|---|---|
| 1. படுத்து | 2. துயில் | (     ) |
| 3. தூக்கம் | 4. விழித்து | |

12. ______________ ஒழியேல்.

| | | |
|---|---|---|
| 1. ஓதுவது | 2. படிப்பது | (     ) |
| 3. பாடுவது | 4. சிரிப்பது | |

13. ஔவியம் ______________.

| | | |
|---|---|---|
| 1. விலகேல் | 2. தேடேல் | (     ) |
| 3. பேசேல் | 4. மறவேல் | |

14. தந்தை ______________ பேண்.

| | | |
|---|---|---|
| 1. அன்னை | 2. அக்கா | (     ) |
| 3. தாய் | 4. மாதா | |

15. நன்றி ______________.

| | | |
|---|---|---|
| 1. சொல்லேல் | 2. கேளேல் | (     ) |
| 3. விலகேல் | 4. மறவேல் | |

## முன்னுணர்வுக் கருத்தறிதல் (5ம.)

சரியான விடையின் எண்ணை அடைப்பினுள் எழுது.

ஓர் ஆற்றில் பல பொருள்கள் மிதந்து கொண்டிருந்தன. அவற்றில் மண் குடமும் இரும்புக் குடமும் மிதந்து 16. __(          )__. இரும்புக் குடம் மண் குடத்தைப் பார்த்து "நண்பா, நீ மிகவும் 17. __(    )__, உனக்கு அதிகம் பலம் இல்லை. நீ விரும்பினால் என் 18. __(    )__ வந்துவிடு. நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்," என்றது.

அதற்கு மண் குடம், "நீ என்னிடம் காட்டும் அன்பிற்கு நன்றி. நீ 19.__(    )__ . நான் பலமில்லாதவன், எதிர்பாராமல் உன் மீது மோதினால் ஆயிரக்காணக்கான சிறு 20.__(    )__ உடைந்து விடுவேன். என்னுடைய நண்பனாக இருந்தால் விலகியே இரு," என்றது. பின் மண்குடம் இரும்புக் குடத்தின் அருகிலிருந்து வெகு தூரம் சென்றது.

தழுவல்: குழந்தைகளுக்கான கதைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | திறமைசாலி | 6. | மேலே |
| 2. | துண்டுகளாக | 7. | வந்தன |
| 3. | மென்மையானவன் | 8. | பலசாலி |
| 4. | ஓடின | 9. | உருண்டைகளாக |
| 5. | அருகில் | 10. | அன்பானவன் |

## ஒலி வேறுபாடு ( 8 ம.)

சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுது.

21. அம்மா சந்தையில் ________________ வாங்கினார்.

ராமன் அதிக ________________ மிக்கவன்.

(பலம், பழம்)

22. என் ________________ வீட்டின் அருகில் உள்ளது.

________________ வீட்டின் சுவரில் ஓடியது.

(பல்லி, பள்ளி)

23. விலங்குத்தோட்டத்தில் இருந்த ________________

உறுமியது.

மீன் குழம்பில் அம்மா ________________ சேர்த்தார்.

(புலி, புளி)

24. ________________ மிக்க மலர்கள் பல அந்தப்

பூங்காவில் இருந்தன.

கிளியின் ________________ சிவப்பு நிறத்தில் இருந்தது.

(அலகு, அழகு)

## தெரிவுவிடைக் கருத்தறிதல் ( 4 ம.)

பின்வரும் பகுதியைக் கவனமாகப் படி.

விடிந்தால் தீபாவளி. அம்மாவும் அப்பாவும் மும்முரமாகச் சமையலறையில் சமையல் செய்து கொண்டிருந்தார்கள். அம்மா கோழிக்கறி சமைப்பதற்காக ஒரு கோழியை உயிருடன் வாங்கி வந்து ஒரு பெரிய கூடைக்கு அடியில் அடைத்து வைத்திருந்தார். அம்மா கோழியை வெட்ட முடிவு செய்து அப்பாவிடம் கோழியைப் பிடித்து வரச் சொன்னார். அப்பாவும் தூக்கக்கலக்கத்துடன் வேகமாகப் போய்க் கூடையைத் திறந்தார். அவ்வளவுதான்! அத்தனை நேரம் அடைப்பட்டுக் கிடந்த கோழி "தப்பித்தோம்! பிழைத்தோம்!" என்று பறந்துவிட்டது. பாவம்! அம்மா கறி வைக்க கோழி இல்லாமல் விழித்துக்கொண்டிருந்தார்.

சரியான விடையின் எண்ணை எழுது.

25. யார் சமையல் அறையில் இருந்தார்கள்?

1. அம்மாவும் கோழியும்
2. அம்மாவும், அப்பாவும்
3. அப்பாவும் கோழியும்
4. அம்மாவும் நானும் ( )

26. அம்மா எதற்குக் கோழி வாங்கி வந்தார்?

1. கோழி வறுவல் செய்ய
2. கோழி பிடிக்க
3. கோழி வெட்ட
4. கோழிக் கறி சமைக்க ( )

27. அப்பா தூக்கக்கலக்கத்துடன் இருக்க காரணம் என்ன?

1. இரவு அதிகநேரம் ஆகிவிட்டதால்
2. சமையல் செய்ததால்
3. கோழிப் பிடிக்கச் சென்றதால்
4. அம்மாவுக்கு உதவியதால் ( )

28. கோழி ஏன் பறந்து சென்றது ?

1. நடக்க முடியாமல் போனதால்
2. களைத்துப் போனதால்
3. அடைப்பட்டுக் கிடந்ததால்
4. கால்கள் வலித்ததால் ( )

<u>மூவிடப்பெயர்(5 ம.)</u>

கோடிட்ட இடங்களில் சரியான சொல்லைக் கொண்டு நிரப்பு.

29. <u>ஆசிரியர்</u> இன்று எங்களுக்கு வீட்டுப்பாடம் கொடுத்தார்.

_______________ அந்த வீட்டுப்பாடத்தை செய்து முடித்து விட்டேன்.

30. <u>அன்னங்கள்</u> குளத்தில் நீந்தி மகிழ்ந்தன.

_______________ பார்க்க அழகாக இருந்தன.

31. <u>நானும் என் அக்காவும்</u> ஒரே பள்ளியில் படிக்கிறோம்.

_______________ பள்ளிக்குப் பேருந்தில் செல்வோம்.

32. <u>சிறுவர்கள்</u> பாட்டுப் போட்டியில் சிறப்பாகப் பாடினார்கள்.

_______________ பாடிய பாடலுக்கு முதல் பரிசு கிடைத்தது.

33. <u>மான்</u> ஒன்று துள்ளிக் குதித்து ஓடியது.

_______________ புதருக்குள் ஓடி மறைந்தது.

## சுயவிடைக் கருத்தறிதல்

பின் வரும் பகுதியைக் கவனமாகப் படி.(10 மதிப்பெண்கள்)

ஒரு மரத்தின் கீழ் ஓர் எறும்பு புற்று இருந்தது. அந்தப் புற்றில் நிறைய எறும்புகள் வசித்தன. அவை எப்போதும் சுறுசுறுப்பாக வேலைகளைச் செய்யும். அந்த எறும்புக் கூட்டத்தில் ஓர் எறும்பு மட்டும் மற்ற எறும்புகளை ஏமாற்றி உணவை எடுத்து உண்ணும். ஒரு நாள் அது ஒரு யானையைச் சந்தித்தது. " யானையே, என்னுடன் சண்டைக்கு வருகிறாயா? யார் போட்டியில் வெற்றி அடைகிறார் என்று பார்ப்போமா?" என்று கூறியது. யானை உடனே எறும்பைத் தன் காலால் மிதித்துக் கொன்றது. பாவம் எறும்பு! அது இறந்து போனது.

### கேள்விகளுக்குப் பதில் எழுது.

34. எறும்பு புற்றில் என்ன இருந்தன?

________________________________________

________________________________________

________________________________________

35. எறும்புகள் எப்படி வேலை செய்யும்?

36. எறும்பு கூட்டத்தில் உள்ள எறும்பு என்ன செய்யும்?

37. எறும்பு யானையிடம் என்ன கூறியது?

38. கடைசியில் எறும்புக்கு என்ன ஆனது?

## சொற்பொருள்

| |
|---|
| சரியான விடையை எழுது. (5 மதிப்பெண்கள்) |

39. நிறைய - ____________ ____________

40. வேலை - ____________ ____________

41. உண்ணும் - ____________ ____________

42. போட்டி - ____________ ____________

43. இறந்து - ____________ ____________

| | | |
|---|---|---|
| பந்தயம் | பணி | செத்து |
| தின்னும் | அழும் | ஏராளமான |

விடைகள் ( Primary 3 - SA 2 2013 )

1. (2) 2. (4) 3. (1) 4. (3) 5. (3)

6. குடும்பத்துடன் 7. நவம்பர் 8. ஏழரை

9. இந்தியாவுக்கு 10. புகைபடக்கருவி

11. (2) 12. (1) 13. (3) 14. (3) 15. (4)

16. (7) 17. (3) 18. (5) 19. (8) 20. (2)

21. பழம், பலம் 22. பள்ளி, பல்லி 23. புலி, புளி

24. அழகு, அலகு

25. (2) 26. (4) 27. (1) 28. (3)

29. நான் 30. அவை 31. நாங்கள் 32. அவர்கள் 33. அவை

34. எறும்புப் புற்றில் நிறைய எறும்புகள் இருந்தன.

35. எறும்புகள் சுறுசுறுப்பாக வேலை செய்யும்.

36. எறும்புக் கூட்டத்தில் உள்ள எறும்பு மற்ற எறும்புகளை ஏமாற்றி உணவை எடுத்து உண்ணும்.

37. எறும்பு யானையிடம் தன்னுடன் சண்டைக்கு வரும்படியும் யார் போட்டியில் வெற்றி பெறுகிறார்கள் என்று பார்க்கலாம் என்றும் கூறியது.

38. கடைசியில் எறும்பு இறந்து போனது.

39. ஏராளமான 40. பணிகளை 41. தின்னும்

42. பந்தயம் 43. செத்து